பக்கங்கள்: 10

காலைக்கதிர்
Kalaikkathir

வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 16 செவ்வாய்க்கிழமை 01.08.2023 கதிர் 263

# அதிகாரப் பகிர்வு, 13, மாகாண தேர்தல் மூன்றையும் பிரித்துப் பார்க்க முடியாது

## நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அறிக்கை

(ந.லோகதயாளன்).

அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு,13ஆம் திருத்தம்,மாகாண சபைத் தேர்தல் ஆகிய மூன்றையும பிரித்துப் பார்க்கமுடியாது எனதமிழ்த்தேசியக்கூட்டமைப்புதெளிவாக ஜனாதிபதியிடம் தெரிவித்திருந்தது என நாடாளுமன்றஉறுப்பினர்எம்.ஏ.சுமந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில்நாடாளுமன்றஉறுப்பினர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்த அறிக்கையானது, தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, அரசியலமைப்பின் 13வது திருத்தம், நீண்டகாலமாகதாமதமாகிவரும்மாகாண சபைத்தேர்தல்கள்மற்றும்ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்கவினால்கூட்டப்பட்டசர்வகட்சி மாநாடுகள்ஆகியவிடயங்கள்தொடர்பான எமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும் வகையில் வெளியிடப்படுகின்றது.

தமிழ் மக்கள், 1956 ஆம் ஆண்டு

## இது ரகசியம் அல்ல!

ஆமைபுகுந்தவீடுஉருப்படாதுஎன்பார்கள். அது போலத்தான் ரணிலும். அவர் எங்காவது புகுந்தால் அந்த இடம் அதன் பின்னர் மீண்டும் ஒன்றாக இருக்காது. அமைப்புக்களைப்பிரித்தாள்வதில்ரணிலை அடித்துக்கொள்ள வேறு ஆள் இல்லை.

தமிமீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை பேச்சு மேசைக்கு அழைத்து உலக நாடுகளை எல்லாம் சுட்டிக்காட்டி கடைசியில் இரண்டாகப்பிளவுபடுத்தியதிலும்ரணிலுக்குக் கணிசமான பங்கு உள்ளது. கருணாவைப் புலிகள் அமைப்பிலிருந்து பிரித்து அவரைப் பாதுகாத்து வைத்திருந்தது ரணிலுக்கு மிக நெருக்கமான நண்பரான நாடாளுமன்ற உறுப்பினர் மௌலானா.

அதுபோல கட்சிகளை உடைப்பதிலும் ரணில் கைதேர்ந்தவர் என்பது உலகறிந்த இரகசியம். ராஜபக் ஷக்களும் கட்சிகைளப் பிளவுபடுத்தி நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தம் வசம் எடுத்துக்கொண்டார்கள்தான். ஆனால்நாசூக்காக வெளியே தெரியாமல் காரியம் பார்த்து கட்சிகளைப்பிளவுபடுத்துவதில் ரணிலுக்கு நிகர் வேறு யாருமில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பிளவுபடுத்தியதிலும் அல்லது ஏற்பட்ட விரிசலை பிளவாக்கி ஆழப்படுத்தியதிலும்

## பெற்றோல் விலை நள்ளிரவு அதிகரிப்பு

இலங்கையில் நேற்று (31) நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் எரிபொருள் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தானம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 20 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 348 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

## ரணிலும் சகாக்களும் உடனேயே பதவி விலகி வீடு செல்லட்டும்

### ஜேவிபி தலைவர் காட்டம்

ரணில் விக்ரமசிங்கவும் அவரது சகாக்களும் உடனடியாக பதவி விலகி வீடு செல்லுமாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் அரச எதிர்ப்பு போராட்டம் நேற்று கோட்டை தொடருந்து நிலையத்துக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

தேசிய மக்கள் சக்தி இந்த ஆட்சிக்கு எதிராகப் போராட்டத்தை முன்னெடுப்பதற்குத் தயாராகி இருந்த நிலையில் ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை உன்கிட்ட முக்கிய பகுதிகளில் அக்கட்சியினர் ஒன்றுகூடுவதற்கு கோட்டே நீதிவான் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்து இருந்தது இந் நிலையில் மத்திய தொடருந்து நிலையத்திற்கு முன்பாக ஒன்றுகூடிய தேசிய மக்கள் சக்தியினர் உழைக்கும் வர்க்கத்தின்ஊழியர்சேமலாப நிதியைகொள்ளையடிக்காதே, ஊழியர் நம்பிக்கை நிதியை சூறையாடாதே உள்ளிட்ட கோசங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்

அங்கு உரையாற்றிய அனுரகுமார மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களுக்காக 8 இலட்சம் கோடிகடன் பெறப்பட்டுள்ளது.

இந்தக் கடன் தொடர்பில் கணக்காய்வாளர்நாயகத்தின் ஆய்வறிக்கையின் பிரகாரம் இரண்டு இலட்சம் கோடி செலவு செய்யப்

## சமஷ்டியை வலியுறுத்தி நேற்று வடக்கு கிழக்கில் போராட்டம்

ஐக்கிய இலங்கைக்குள் இணைந்த வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு மீளப் பெற முடியாதசமஷ்டிமுறையிலான அதிகாரப்பகிர்வைவலியுறுத்தி முன்னெடுக்கப்பட்ட 100 நாள் செயற்பாடுகளின் ஒரு வருட பூர்த்தியைமுன்னிட்டுவடக்கு-கிழக்கு மாகாணங்களின் பல இடங்களிலும் நேற்று கவனவீர்ப்புப்போராட்டங்கள் இடம்பெற்றன.

யாழ்ப்பாணம், மன்னார்,திருகோணமலை ஆகிய இடங்களில் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

மக்களின் குர லாகத் தொடர்ந்து ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்திற்குள்



## தங்கச்சிமடத்தில் நேற்று 9 கிலோ தங்கம் சிக்கியது

### யாழ்ப்பாணத்திலிருந்து கடத்தல் எனச் சந்தேகம்



(ந.லோகதயாளன்.)

யாழ்ப்பாணத்தில்இருந்து கடத்திச் செல்லப் பட்டதாகக் கருதப்படும் 9 கிலோ தங்கம் நேற்று தமிழ்நாடு தங்கச்சிமடத்தில் கைப்பற்றப் பட்டுள்ளது.

இந்தியாவின் சுங்கத் திணைக்களத்தின்புலனாய்வு அதிகாரிகளால் இந்தப் பறி முதல் இடம்பெற்றுள்ளது. இலங்கையில் இருந்து தங்கத்தை கடத்தி வரப்பயன்படுத்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும்இரு படகுகளும்கைப் பற்றப்பட்டுள்ளன.

இந்தத் தங்கத்தைப் படகுகளில் கடத்திய சந்தேகத்தில் நால்வரும் அதற்கான ஏற்பாட்டை மேற்கொண்டனர் என இருவருமாக மொத்தம் ஆறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட தங்கம் இந்திய நாணயத்தில் சுமார் 5 கோடி ரூபா மதிப்புள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## யாழ்ப்பாணத்திலும் இன்றுமுதல் ‘பிக்மி’




யாழ்ப்பாணத்தில் PickMe செயலி மூலம் இன்று முதல் வாடகைக்கு வாகனங்களை அமர்த்தி பிரயாணங்களை மேற்கொள்ள முடியும் என PickMe செயலியின் வடமாகாண முகவர் தவதீஸன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் பல பகுதிகளிலும் குறித்த செயலி பயன்பாட்டில் இருந்தாலும் கூட யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உத்தியோக பூர்வமாக இன்று முதலே

## மின் தடையைத் தவிர்ப்பதற்காக விவாசயத்திற்கு தண்ணீர் இல்லை

### அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு



சப்பிரகமுவ மாகாண விவசாயிகளின் கோரிக்கைக்கு அமைய நீரை வழங்கினால் தென் பகுதியின் ஐந்து மாவட்டங்களுக்கும் மின்சாரத் துண்டிப்பு மேற்கொள்ளப்படவேண்டி ஏற்படுமென அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

பொது நிகழ்வு ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சப்பிரகமுவ மாகாண விவசாயிகள் விவசாயத்துக்கு நீரை விடுவிக்குமாறு வலியுறுத்தி வீதிக்கு இறங்கியுள்ளார்கள். அவர்களின் கோரிக்கை அமைய சமனல நீர்த்தேக்கத்தின் நீரினைத் திறந்து விட்டால்

## முல்லைத்தீவில்

## காணி சுவீகரிப்பை எதிர்த்து மாணவர்கள் போராட்டம்

முல்லைத்தீவு-அக்கரை வெளி காணி சுவீகரிப்புக்கு எதிராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ். பல்கலைக்கழக பிரதான நுழைவாயிலுக்கு முன்பாக இன்று (31) மாலை ஒன்றுகூடிய பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, ‘மகாவலி அபிவிருத்தி அதிகார சபையே நிலங்களை அபகரிக்காதே’, ‘எமது நிலம் எமக்குவேண்டும்‘ எனப் பல்வேறு கோஷங்களை மாணவர்கள் எழுப்பினர்.

(02)



## மின் துண்டிப்பை விடவும் உணவே மிக முக்கியமானது

### அமைச்சர் மகிந்த அமரவீர பதிலடி

மின்சார துண்டிப்பை விடவும் உணவுப் பற்றாக் குறையைத் தடுப்பதே முக்கியமானதென அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

சப்பிரகமுவ விவசாயிகளின் போராட்டம் தொடர்ல் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார் அவர் மேலும் தெரிவித்ததாவது:

விவசாயதிற்குஉரியநீரை வழங்கவேண்டியதுதற்போது நிலையில்முக்கியமாகின்றது.



சப்ரகமுவ மாகாணத்தில் விவசாயம் இடம்

## இனி இது .....

ரணிலுக்குப்பங்கிருக்கின்றது. அவரது ஆகப் பிந்திய கட்சி உடைப்புமொட்டுக்கட்சிக்குள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றது. ரணில் விடயத்தில் அந்தக் கட்சி இப்போது தெளிவாக இரண்டாகப்பிளவுண்டுள்ளது. அடுத்த தேர்தலில் ரணிலை ஜனாதிபதி வேட்பாளராக மொட்டுவின் சார்பிலும் நிறுத்துவதாஎன்பதில் இந்தப்பிளவு ஏற்பட்டுள்ளது.

கட்சிக்குள் செல்வாக்கு அதிகரித்து வரும் ராஜபக்ச குடும்பத்தில் முடிக்குரிய இளவரசரான நாமல் மற்றும் அவரது சகாக்கள் ரணிலை எதிர்க்கிறார்கள். அப்படி ரணிலை எதிர்த்து அரசியல்செய்வதேதமக்கும் கட்சிக்கும்நல்லதுஎன்றுஅவர் கருதுகின்றார். அதேநேரம் ரணிலைஆதரிக்கவேண்டும் என்று அமைச்சர்கள் சிலர் விடாப்பிடியாக நிற்கின்றார். இந்தக்கருத்துமோதலால்கட்சி இண்டாகப்பிளவுண்டுள்ளது.

பொது வெளியிலேயே இரு தரப்பினரும் ஒருவரை ஒருவர் மாற்றி மாற்றிக் கருத்துத் தெரிவிக்கும் எதிரும் புதிருமாகக் கருத்துத் தெரிவிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். எல்லாக் குட்டைகளையும் குழப்பில் அதில் மீன்பிடிப்பதில் தான் வல்லவர் என்பதை ரணில் மீண்டும் நிரூபித்துள்ளார்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## அதிகாரப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதல், வடக்கு - கிழக்கில் சமஷ்டி ஏற்பாட்டின் மூலம் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வை நோக்கிச் செயற்படுவதற்கானஆணையை, தமிழ் அரசியல் கட்சிகளுக்கு தொடர்ச்சியாக வழங்கியுள்ளனர். 1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட இந்திய-இலங்கை உடன்படிக்கையில் வடக்கு கிழக்கானது தமிழ் பேசும் மக்களின் பூர்வீக வாழ்விடம் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது, இதில் மாகாணங்களுக்குகாணிமற்றும் பொலிஸ் அதிகாரங்கள் உள்ளடங்கலான அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டிருந்தது.

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இடம்பெற்ற தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளின் விளைவாக இந்தியா வழங்கிய அனுசரணைகளை இலங்கை ஏற்றுக்கொண்டது முதல் கடந்த 40 ஆண்டுகளாக இந்திய அரசாங்கம் இந்த முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது. மிக சமீபத்தில் கூட, இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் , இலங்கைஅரசுதமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றி, சமத்துவம், நீதி மற்றும்சமாதானத்திற்கான மறுகட்டமைப்பை முன்னெடுத்துச் செல்லும் என்ற இந்தியாவின் நம்பிக்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்திருந்தார். மேலும் 13வது திருத்தத்தை அமுல்படுத்துவதற்கும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கும், இலங்கையின் தமிழ் சமூகத்திற்கு சுயமரியாதை மற்றும் கண்ணியமான வாழ்க்கையை உறுதி செய்யவும் இலங்கை தனது உறுதிமொழியை நிறைவேற்றும்என்றும்அவர்தனது நம்பிக்கையை தெரிவித்திருந்தார். பின்னர், செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் இந்திய வெளியுறவு செயலாளர் பின்வருமாறு கூறியிருந்தார்.

''ஒன்றுபட்ட மற்றும் வளமான இலங்கை எனும் கட்டமைப்பிற்குள் தமிழ் சமூகத்தின் அபிலாஷைகள், நிச்சயமாக சமத்துவம், நீதி மற்றும்சுயமரியாதைக்கான அபிலாஷைகளை நிவர்த்தி செய்யும் அரசியல் தீர்வை இந்தியா தொடர்ந்து எதிர்நோக்குகிறதுஎன்றஉண்மையின்அடிப்படையில்இதைவிட வெளிப்படையாக எதுவும் இருக்க முடியாது. அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு மற்றும் 13வது திருத்தத்தைமுழுமையாகஅமுல்படுத்துதல் என்பன இலங்கையின்நல்லிணக்கச்செயற்பாடுகளுக்குதீர்வுகாண்பதற்கும், அதனை எளிதாக்குவதற்கும் இன்றியமையாத கூறுகளாகும் என பிரதமர் மேலும் தெளிவாகக் கூறியிருந்தார். இதுவேஎங்களின் நிலையான நிலைப்பாடாக இருந்து வருகின்றதோடு, இது இரு தலைவர்களுக்கிடையிலான சந்திப்பின் போதும் முன்வைக்கப்பட்டது.''

1956 முதல் ஒவ்வொரு தேர்தலிலும் வெளிப்படுத்தப்படும் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு இணங்க, சமஷ்டி கட்டமைப்பில்அதிகாரப்பகிர்வு இருக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். அரசியலமைப்பின் 13 வது திருத்தம் இலங்கையின் அரசியலமைப்பின் ஒரு பகுதியே தவிர, ஒரு தனி இணைப்பு அல்ல. ஜனாதிபதி மற்றும் நாம் அனைவரும் அதைநிலைநிறுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் சத்திய பிரமாணம் செய்துள்ளோம். இவ்வாறுஅரசியலமைப்பின் ஒரு பகுதியை நடைமுறைப்படுத்தாதது விடுவது என்பது அரசியலமைப்பு முழுவதையும்மீறுவதாகவே அமையும். எனவே எமது அரசியலமைப்பில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அதிகாரப்பகிர்வு ஏற்பாட்டை முழுமையாக அமுல்படுத்துமாறு நாம் வலியுறுத்துகின்றோம். எனினும் அது தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளை பூர்த்தி செய்யாது. அதிகாரப் பகிர்வு ஏற்பாட்டை பல்வேறு செயல்முறைகள் மூலம் அர்த்தமுள்ளதாக்கவேண்டும் என்பது,மங்கள முனசிங்க தெரிவுக்குழுவில் இருந்து 2016 - 2019 வரை அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் இடம்பெற்ற அரசியலமைப்பு பேரவை வரை, மற்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பதவிக் காலத்தின் போது இந்தியாவுடன்குறைந்தபட்சம்மூன்று தனித்தனி கூட்டு அறிக்கைகள் மூலம் உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் முறைமையை மாற்றியமைக்கும் நடவடிக்கையில் ஏற்பட்டுள்ள சட்ட காலதாமதங்கள் காரணமாக குறைபாடுகளுடன் இயங்கி வந்த ஒன்பது மாகாண சபைகள் செயலிழந்துள்ளன. பிரதமர்தினேஷ்குணவர்தன தலைமையிலான தேர்தல் சீர்திருத்தத் தெரிவுக்குழு கடந்த வருடம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில், மூன்று வருடங்களுக்கும் மேலாக இடைநிறுத்தப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல் மக்களின் ஜனநாயக உரிமையை மறுப்பதாக இனங்கண்டு முன்பு இருந்த விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் தேர்தலை நடத்த வேண்டும் என பரிந்துரை செய்ததோடு இதை செயல்படுத்த தகுந்த சட்டம் இயற்ற வேண்டும் என்றும்பரிந்துரைத்தது. இந்த பரிந்துரைகளுக்கு இணங்க நான்ஒருதனிநபர்சட்டமூலம் ஒன்றினை தயாரித்து முன்வைத்திருந்தேன், அதன் முதல் வாசிப்பு முடிந்த நிலையில் இந்த சட்டமூலம் உச்சநீதிமன்றத்தில்சவாலுக்கு உட்படுத்தப்பட்டது. மேலும் இதில் உள்ள சில சரத்துகளில் பரிந்துரைக்கப்பட்ட மாற்றங்களைச் செய்தால், அதனை பாராளுமன்றத்தில்சாதாரண பெரும்பான்மை மூலம் சட்டமாக்க முடியும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

2022 டிசம்பர் 10 ஆம் திகதி இடம்பெற்ற முதலாவது சர்வகட்சி மாநாட்டிலேயே மாகாண சபைத் தேர்தலை இனியும் தாமதிக்காமல் நடத்த வேண்டும் என தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு தெளிவாக ஜனாதிபதியிடம் தெரிவித்திருந்தது. அதிகாரப் பகிர்வை அர்த்தமுள்ளதாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் குறித்தும் நாங்கள் விவாதித்தோம். ஜனாதிபதியுடன் பல கலந்துரையாடல்கள் இடம்பெற்றதுடன், 2023ஜனவரி26ஆம் திகதிநடைபெற்றஇரண்டாவது சர்வகட்சிமாநாட்டில்மீண்டும் எமது நிலைப்பாட்டை வலியுறுத்தினோம். கடந்த 2023ஆம் ஆண்டு ஜூலை 26ஆம் திகதி நடைபெற்ற சர்வ கட்சி மாநாட்டிலும் இதே நிலைப்பாட்டையே தெரிவித்தோம். இவ்விடயத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின்நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை அவ்வாறே உடனடியாக மாகாண சபைத் தேர்தல்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட மற்றும் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுக்கு அழைப்பு விடுப்பதற்கும் இடையில் எந்த முரண்பாடும் இல்லை. மேலும்கூறுவதானால்ஒன்று இல்லாது மற்றொன்றில் எவ்வித அர்த்தமும் இல்லை என்றுள்ளது.

## ரணிலும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது. 6 இலட்சம் கோடிக்கு என்ன நடந்தது என்று தெரியாது உள்ளது.

இந்த நிலையில் 2015ஆம் ஆண்டுக்குப் பின்னரான காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும் ஆராய்வதாக கணக்காய்வாளர் தெரிவித்துள்ளார்.

உண்மையில் அந்த ஆய்வினை மெதமுலனவிலும் ரவி கருணாநாயக்கவின் வீட்டிலும் ரணில் விக்கிரமசிங்கவின் நண்பர்களிடத்திலும் தான் மேற்கொள்ள வேண்டும் நாட்டில் அபிவிருத்தின் பெயரால் 25 சதவீதமான பணிகள்தான் முன்னெடுக்கப்பட்டுள்ளன 75 சதவீதமான நிதி கொள்ளையிடப்பட்டுள்ளது

இது மட்டுமல்ல மத்திய வங்கியின் பிணை முறி மோசடியில் 1110 கோடி ரூபா கொள்ளையிடப்பட்டுள்ளது அத்துடன் சீனி இறக்குமதி மோசடி ஹெய்ஜிங் ஒப்பந்த மோசடி என்று பட்டியல் நீள்கின்றது.

இந்த நிலையில் தற்போது ஊழியர்நம்பிக்கை நிதியம் ஊழியர் சேமலாப நிதியம் ஆகியவற்றை மோசடிசெய்வதற்குமுயற்சிக்கப்படுகின்றது இனியும் பொறுத்திருக்க முடியாது ரணில் விக்கிரமசிங்கவும் அவருடைய நண்பர்களும் ஆட்சியில் இருந்து விலகி வீடு செல்ல வேண்டும் தேசிய மக்கள் சக்தி மக்களின் தேசிய ஆணையுடன் அதிகாரத்தை கையில் எடுப்பதற்கு தயாராக உள்ளது - என்றார்.

## பெற்றோல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன், ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஒக்டேன் 95 ரகபெற்றோல்லீற்றர்ஒன்றின் புதிய விலை 375 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 2 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஓட்டோ டீசல் 306 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும்.

சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின்விலை12ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஒரு லீற்றர் சுப்பர் டீசல் 358 ரூபாவாக விற்பனை செய்யப்படவுள்ளது.

அதேபோல், மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின்விலை10ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 226 ரூபாவுக்குவிற்பனைசெய்யப்படவுள்ளது. (02)

## மின் தடையைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளொன்றுக்கு நான்கு மணித்தியாலங்கள் வரையில் மின்சாரத்தை துண்டிக்கும் நிலைமை ஏற்படும்.

நீர்த்தேக்கத்தின் நீரை திறந்துவிட்டால்கூட இரண்டு நாட்களுக்கே விவசாயத்தை மேற்கொள்ள முடியும். ஆகவே நீர்த்தேக்கத்தின் நீரை திறந்து விடுவதில் பயனில்லை. அதுமட்டுமன்றி விவசாயிகளின் கோரிக்கைக்குஅமையநீரைதிறந்து விட்டால் அம்பாந்தோட்டை, காலி மாத்திறை உட்பட ஐந்து மாவட்டங்களுக்கானமின்சார துண்டிப்பு ஏற்படும் - என்றார்.

## மின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறாவிட்டால் 30 பில்லியன் ரூபா வரையில் நட்டம் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன அவ்வாறு நெல் உற்பத்தியில் பின்னடைவு ஏற்படுகின்றபோது இம்முறை இந்தியாவிலிருந்துஅரிசியை இறக்குமதி செய்ய முடியாது. ஏனென்றால் இந்தியா அரிசி ஏற்றுமதியை தடை செய்துள்ளது ஆகவே நெல் உற்பத்தி குறையும்பட்சத்தில் மக்கள்பசியுடன்வாழவேண்டிய நிலைமை ஏற்படும் எனவே அதிகாரிகள் இரண்டு மணி நேரம் மின்னை துண்டித்தாவது நீர்பாசன செயற்பாடுகளை விவசாயிகளுக்காக முன்னெடுக்க வேண்டும் - என்றார்

## யாழ்ப்பாணத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிமுகப்படுத்து கின்றோம்.

ஜனவரி மாத தொடக்கத்தில் இருந்து பரிட்சார்த்த நடவடிக்கைகள் இருந்தாலும்கூட இன்று முதல் பிக்மி (PickMe) செயலியை பொதுமக்கள் பயன்படுத்த முடியும்.

முச்சக்கர வண்டி, கார் சாரதிகள் தங்கள் வாகனங்களை வாடகைக்கு அமர்த்துபவர் என்றால், குறித்த செயலி மூலம் இலவசமாக பதிவு செய்து கொள்ள முடியும்.

சாரதிகள் பதிவு செய்ய வாகனத்தின் முன் பக்கம், கரை பக்கம், உள் பக்க படம் , தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் முன் பக்கம், பின் பக்க புகைப்படம், வாகன வரி பத்திரம், வாகன காப்புறுதி பத்திர புகைப்படம், சாரதியின் புகைப்படம் என்பவற்றை வட்ஸப் (WhatsApp) மூலம் அனுப்பலாம். பதிந்த பின் சாரதிகளுக்கு ஒரு செயலி வழங்கப்படும். அதில் உங்கள் இரகசிய குறியீட்டின் மூலம் ஒன்லைனில் இருந்தால் போதும்.

பொதுமக்கள், வாடிக்கையாளர்கள் சாரதிகளிடம் தாம் செல்லவேண்டிய இடத்தை செயலி மூலமாக முன்பதிவு செய்வார்கள் - என்றார்.

# செல்வச் சந்நிதியான் ஆலய திருவிழா ஏற்பாடுகள் பூர்த்தி

யாழ்ப்பாணம் - தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவுக்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. திருவிழா ஏற்பாடுகள் தொடர்பாக இடம்பெற்ற கூட்டத்தில் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இது தொடர்பில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் ஆழ்வார்ப்பிள்ளை சிறி ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மகோற்சவ காலத்தில் ஆலயச்சூழலில் ஒருவழிப் பாதை நடைமுறைப்படுத்தப்படும் என்பதுடன் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவதனை தடுப்பதற்காக ஆலய பிரதான ஆற்றங்கரைபக்கத்தில்இருக்கின்றபாதையின் ஊடாக முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் என்பன வாகன தரிப்பிடத்திற்குச் செல்ல முடியும்.

தொண்டைமானாறு ஆற்றில் முதலைகள் நடமாட்டம் காணப்படுவதால் ஆற்றில் இறங்குவதை தவிர்க்க பக்தர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

ஆலய பூசைகளின்போது ஆலய சுற்றாடலில் சுகாதார நடைமுறைகளை முறையாக பின்பற்ற தவறும் பட்சத்தில் அல்லது மீறுபவர்கள் மீது சுகாதார நடைமுறைகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஆலய தேரோடும் வீதிகளில் நடைபாதை வியாபாரிகளுக்கும் தற்காலிக கடைகளுக்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதுடன் மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

தனியார் காணிகளில் அமைந்திருக்கும் நிரந்தர கடைகளுக்கு அனுமதி வழங்கப்படும். புதிய கடைகளுக்கோ வீதியோரக் கடைகளுக்கோ ஆலய வீதியில் அனுமதி வழங்கப்படமாட்டாது.

ஆலய மகோற்சவ காலத்தில் உணவு நிலையங்கள் அமைக்கப்பட வேண்டி இருப்பின் அதன் உரிமையாளர் நாட்டின் எப்பாகத்திலாவது உணவு நிலையம் நடத்திய அனுபவம் மற்றும் மருத்துவ சான்றிதழை கொண்டிருத்தல் வேண்டும்.

உணவு நிலையங்களில் உணவினை கையாள்பவர்கள் மற்றும் அன்னதான மடங்களில் பணிபுரிபவர்கள் என அனைவரும் மருத்துவச்சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

உணவு நிலையங்களிற்கான குடிதண்ணீர் பொதுச்சுகாதார பரிசோதகரினால் அனுமதிக்கப்பட்ட இடங்களில் இருந்து மட்டுமே பெறப்படவேண்டும்.

ஆலய ஒலிபெருக்கி பாவனை தவிர வேறு ஒலிபெருக்கி பாவனைக்கு தடைவிதிக்கப்பட்டடுள்ளது

கடை உரிமையாளர்கள் ஒவ்வொரு நாளும் முறையாக கழிவகற்றல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பொருட்களின் நிர்ணயிக்கப்பட்ட விலையினை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

தேர்த்திருவிழா அன்று தேரவீதியுலாவரும் சமயத்தில் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை தவிரப்பதற்காக அந்த நேரத்தில் ஆற்றங்கரை வீதியூடாக வாகனங்கள் உள் நுழைவதற்கு தற்காலிகமாக அனுமதி மறுக்கப்படும்.

அடியவர்கள் ஆசாரசீலர்களாக ஆலயத் திற்கு வருகைதருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் - என்றுள்ளது.

# இரத்தினபுரியில் மண் சரிவு அதில் சிக்கி ஒருவர் இறப்பு

இரத்தினபுரியில் நேற்று (31) இடம்பெற்ற மண்சரிவில் சிக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் மேலும் இருவர் படுகாயம் அடைந்துள்ளனர் என்று இரத்தினபுரி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை இரத்தினபுரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (02)


# வவுனியா சிறையில் சின்னம்மை தீவிரம்

(ந.லோகதயாளன்.)

வவுனியாசிறைச்சாலையில்உள்ள கைதிகள்பலருக்குசின்னஅம்மைநோய் தீவிரமாகப் பரவியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா சிறைச்சாலையில் தற்போது 200 முதல் 300 வரையான கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 14 பேருக்கு சின்ன அம்மை நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளதனால் உறவினர்கள் கைதிகளை பார்வையிடுவது தற்காலிகமாக தடைசெய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் அறிவித்துள்ளார்.




NEWS 91

31.07.2023

இளம் விஞ்ஞானிகளிற்கான விருது 2023. News 91 Channel வடமாகாண இளைஞர்களிடையே நடாத்தும் புத்தாக்க போட்டி. 25 வயதிற்குட்பட்ட இளைஞர்கள் மாணவர்கள் இதில் பங்கு பற்றலாம். தெரிவு செய்யப்படும் விஞ்ஞான கண்டு பிடிப்பிற்கு ஒரு இலட்சம் பரிசு. (நிபந்தனைகளிற்கு அமைவானது) ஏனைய விபரங்களை எமது QR scan செய்து எமது channel ஊடாக பெற்றுக் கொள்ளவும்.

S. SURESH
Channel Admin

162, Koswatta Road, Nawala, Sri Lanka
newsbatch91@gmail.com
+94 76 2 339 191

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

# கடைகள், உணவுப் பண்டங்களின் தரங்கள் மடு ஆலய விழாவில் சோதனைக்கு உட்படும்

## மன்னார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவிப்பு

மடுஆலயவிழாவுக்காக கடைகள் மற்றும் விற்பனை நிலையங்கள் அமைத்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் சகலரும் சுகாதார பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர்.

அத்துடன் இவர்கள் விற்பனை செய்யப்படும் உணவுப் பொருள்களின் தரமும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் என மன்னார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.விநோதன் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட செயலகத்தில் மன்னார் அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் ஆவணி மாதம் நடைபெற இருக்கும் மடு அன்னை பெருவிழாவுக்கான முன்னேற்பாடு தொடர்பான கூட்டத்திலேயே மன்னார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.விநோதன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

எதிர்வரும் ஆவணி மாதம் 15 ஆம் திகதி வழமைபோன்று நடைபெற இருக்கும் மருதமடு அன்னையின் வருடாந்த பெருவிழாவுக்கான சுகாதார நடைமுறைகள் கடந்த காலங்களைப்போல் இம்முறையும் சிறந்த முறையில் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

மருதமடு ஆலய வளாகத்துக்குள் இருக்கும் வைத்தியசாலையில் எமது சுகாதாரப் பிரிவினர் அங்கு நிலைகொண்டு அவசர மற்றும் சாதாரண சிகிச்சைகள் அளிப்பதற்கான முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு நோயாளர் அம்புலன்ஸ் மடு வைத்திய சாலையில் தரித்து நிற்கப்படும். அவசர நோயாளிகளை இங்கிருந்து அனுப்பப்பட வேண்டிய வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்வதற்கானஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் மடு ஆலயத்தை சூழவுள்ள பகுதிகளில் டெங்கு நோயை பரப்பக்கூடிய நுளம்புகள் உள்ளனவா என்பதன் பரிசோதனை எமது பூச்சியல் பிரிவினரால் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறுடெங்குநுளம்பு இனம் காணப்பட்டால் புகையூட்டல் இடம்பெறும். அத்தோடு அப்பகுதிகளில் கடைகள் மற்றும் விற்பனை நிலையங்கள் அமைத்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் சகலரும் சுகாதார பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர்.

இவ்வாறான நடவடிக்கைகளில் பொது சுகாதார பரிசோதகர்கள் கடமையில் ஈடுபடுவர். அத்துடன் இவர்கள் விற்பனை செய்யப்படும் உணவுப் பொருள்களின் தரமும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும்.

பொது சுகாதர பரிசோதகர்கள் மற்றும் பயிற்சி நெறியில் ஈடுபடும் சுகாதார பகுதினர் கொண்ட அணியினர் இதில் ஈடுபடுத்தப்பட இருக்கின்றனர்.

இதைவிட இங்குவரும் மக் களின் தொகைக்கு ஏற்ப போதியளவு சுகாதார அணியினரை சேவையில் ஈடுபடுத்தவும் நாம் திட்டமிட்டுள்ளோம் என மன்னார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.விநோதன் இவ்வாறு தெரிவித்தார். (05)

# ஓகஸ்டில் இரண்டு சந்திர கிரகணங்கள்

ஓகஸ்டில் ஒன்றல்ல இரண்டு சந்திர கிரகணங்கள் முதலாம் மற்றும் 30 ஆம் திகதிகளில் நிகழவுள்ளன.

பூமி மற்றும் சந்தி ரன் ஆகியவை ஒரே நேர்க் கோட்டில் வரும்போது, சூரிய ஒளி சந்திரனில் படாது. அந்த நிகழ்வே சந்திர கிரகணம் ஆகும்.

ஒவ்வொரு மாதமும் சந்திரன் ஒரு நீள்வட்ட சுற்றுப்பாதையில் பூமியை சுற்றி வருகிறது. அதுவே பூமிக்கு மிக அருகில் வரும்போது, முழு சந்திரனாக (பௌர்ணமி) இருப்பின், 'சூப்பர்மூன்' என்று அழைக்கப்படுகிறது.

இந்த நிகழ்வின் போது, முழு சந்திரன், ஆண்டின் மங்கலான நிலவை விட 17 சதவீதம் பெரியதாகவும் 30 சதவீதம் பிரகாசமாகவும் தோன்றுகிறது.

ஓகஸ்ட் 1 ஆம் திகதி சூப்பர்மூன் காட்சியளிக்க உள்ளது. இலங்கைநேரப்படி 1ஆம் திகதி மாலை 18 மணி 31 நிமிடங்களில் தோற்றமளிக்கும்.

தென்கிழக்கில் வெறும் 222,159மைல்கள்(357,530 கிமீ) தொலைவில் இருந்து முழு சந்திரன் உதயமாகும் என்பதால், ஓகஸ்ட் 1 ஆம் திகதி மாலை நாளை முதல் மக்கள் பார்வையிட முடியும்.

ஓகஸ்ட் 30 புதன்கிழமை இரவு, 222,043 மைல்கள் (357,344 கிமீ) தொலைவில் இது இன்னும் மிக அருகில் வரும். மேலும் இது இரண்டாவது முழு சந்திரன் என்பதால், இது நீல சந்திரன் என்று அழைக்கப்படுகிறது.

சந்திரன் பூமியிலிருந்து மிகத் தொலைவில் இருக்கும் போது இந்த புள்ளிவிவரங்கள் சுமார் 252,088 மைல்கள் (405,696 கிமீ) தூரத்துடன் ஒப்பிடுகின்றன. (05)

### கட்டுநாயக்க விமான நிலையத்தில்

# கைதான யாழ், புத்தளம் இளைஞர்கள் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் வசம்

போலிக் கடவுச்சீட்டு மற்றும் விமானச் சீட்டுகளைப் பயன்படுத்தி ஐரோப்பாவுக்குச் செல்ல முயன்ற 5 இளைஞர்கள், நேற்று (திங்கட்கிழமை) காலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இளைஞர்களில் ஒருவர் புத்தளம்பிரதேசத்தில் வசிக்கும் 24 வயதுடையவராவார். இவருடன் யாழ். பிரதேசத்தைச் சேர்ந்த மேலும் நான்கு இளைஞர்கள் ஜேர்மனிக்கு செல்ல முயற்சித்தபோதே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இளைஞர்களால் வழங்கப்பட்டஆவணங்களை பரிசோதித்த குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகள், அவர்களிடம் காணப்பட்ட கடவுச்சீட்டு மற்றும்விமானடிக்கெட்டுகள் போலியானவை என்பதை கண்டுபிடித்துள்ளனர்.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட இவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (05)

# காவலாளியைத் தாக்கிய குற்றச்சாட்டு கல்கிஸை பாடசாலை அதிபர் கைது

*காவலாளியை தாக்கிய குற்றச்சாட்டின் பேரில் கல்கிஸையிலுள்ள அரச பாடசாலை ஒன்றின் அதிபர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். தாக்குதலுக்குள்ளான காவலாளியான ஹொரணை, மேவனபலான பிரதேசத்தை சேர்ந்த 28 வயதான இளைஞராவார்.*

*இவர் தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.*

*பாடசாலையில் மது அருந்திவிட்டு அதிபர் தாக்குதலை மேற்கொண்டார் எனக் காயமடைந்த காவலாளி பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளார்.*

*தாக்குதல் சம்பவம் தொடர்பில் சந்தேக நபரான அதிபர் உட்பட ஐவரிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)*

# ஹெரோயினுடன் கைதான நால்வருக்கு விளக்கமறியல்

## அவர்களில் இருவர் பெண்கள்; யாழில் சம்பவம்

யாழ்ப்பாணம் மானிப்பாய்பகுதியில்உயிர்கொல்லி போதைப்பொருளான ஹெரோயினுடன் கைதான இரு பெண்கள் உள்ளிட்ட நால்வர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மானிப்பாய் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் ஹெரோயின் போதைப்பொருள்களுடன் இரு பெண்கள் உள்ளிட்ட நால்வர் சனிக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட நால்வரிடமும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் நால்வரையும் ஞாயிற்றுக்கிழமை மல்லாகம் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தினர்.

அதனை அடுத்து நால்வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (05)

# பாட்டலி சம்பிக்க ரணவக்க தொடர்பான வழக்கு நவம்பர் 23 இற்கு ஒத்திவைப்பு!

*கவனவீனமாக வாகனம் செலுத்தி விபத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவுக்கு எதிராக சட்டமா அதிபர் தாக்கல் செய்த வழக்கு நேற்று (திங்கட்கிழமை) கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. பிரதிவாதியான பாட்டலி சம்பிக்க ரணவக்க நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார்.*

*இந்த வழக்கு தொடர்பில் பிரதிவாதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மற்றுமொரு மேன்முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார் என சட்டத்தரணி சுட்டிக்காட்டியுள்ளார்.*

*இதன்படி வழக்கை நவம்பர் 23 ஆம் திகதிக்கு ஒத்திவைத்து உயர்நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.*

*(05)*



# கட்டுநாயக்க ஹினடியன பிரதேச கால்வாயில் பெருந்தொகையான கசிப்பு கைப்பற்றப்பட்டது!

கட்டுநாயக்கவின் ஹினடியன பிரதேச கால்வாய் பகுதியில் காணப்பட்ட சட்டவிரோத கசிப்பு காய்ச்சும் இடம்ஒன்றைச்சுற்றிவளைத்த கட்டுநாயக்க பொலிஸார் சுமார்15லட்சம்ரூபாபெறுமதியான கசிப்பு, கோடா மற்றும் வடிகட்டும்உபகரணங்களைக் கைப்பற்றியதுடன் கசிப்பு காய்ச்சிக் கொண்டிருந்த இருவரையும் கைது செய்துள்ளனர்.

இதன்போது, 405,000 மில்லி கசிப்பு, ஸ்பிரிட் அடங்கிய 12 கலன்கள் 52,92,000 மில்லி கோடா அடங்கிய28பீப்பாய்களையும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹினடியன பகுதியைச் சேர்ந்த 50 வயது மற்றும் 35 வயதுடைய இருவரையே பொலிஸாரால் கைது செய்துள்ளனர். சந்தேக நபர்கள் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (05)

# 7 மாதங்களில் 65 மருந்துகள் பாவனையில் இருந்து நீக்கம்

இந்த வருடத்தின் கடந்த 7 மாதங்களில் தரம் தொடர்பான பிரச்சினைகள் காரணமாக 65 மருந்துகள் பாவனையிலிருந்து நீக்கப்பட்டுள்ளன என சுகாதாரஅமைச்சின்மேலதிக செயலாளர் வைத்தியர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

65 மருந்துகளில் இந்திய கடன் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளும் உள்ளன எனவும், 6 மருந்துகள் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுவன எனவும் டாக்டர் சமன்ரத்நாயக்க குறிப்பிட்டார். (05)

## 97 உயர்தரக் கலைப்பிரிவு மாணவர்களால்

# ஸ்கந்தவரோதயவுக்கு சைக்கிள் தரிப்பிடம்







சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் 1997 ஆம் ஆண்டில் உயர்தரம் கல்விகற்ற கலைப்பிரிவு மாணவர்களால் தமது அணியினரின் ஞாபகார்த்தமாக சைக்கிள் தரிப்பிடம் ஒன்று அமைக்கப்பட்டு நேற்று(திங்கட்கிழமை) காலை அவர்களின் வகுப்பாசிரியர் கலாநிதி ஆறு. திருமுருகனால் திறந்துவைக்கப்பட்டது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முதல்வர் லயன் மு.செல்வஸ்தானின் கோரிக்கைக்கு அமைவாக 1997 ஆம் ஆண்டு கலைப்பிரிவு மாணவர்களால் 24 லட்சம் ரூபா பெறுமதியில் மாணவர்களுக்கான இந்த சைக்கிள் தரிப்பிடம் அமைக்கப்பட்டது.

ஸ்கந்தாவின் வரலாற்றில் 1997 ஆம் ஆண்டு அணியினர் 24 மாணவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்துக்கு மட்டும் தெரிவாகி கல்லூரிக்கு சாதனையை ஏற்படுத்திக் கொடுத்தனர். அதேவேளை, சப்ரகமுவ, ரஜரட்டை பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வியியற்கல்லூரிகளுக்கும் இராமநாதன் நுண்கலைப்பீடம் என ஏராளமான மாணவர்கள் தெரிவாகியிருந்தனர் என்று 1997 ஆம் ஆண்டு கலைப்பிரிவு தொடர்பான சாதனை விவரங்களை அதிபர் மு.செல்வஸ்தானும் பிரதம விருந்தினராக வருகைதந்த அந்த அணியின் வகுப்பாசிரியர் கலாநிதி ஆறு.திருமுருகனும் நினைவுகூர்ந்து பாராட்டி உரையாற்றினர்.

பொருளாதாரத் தடை வடக்கு மாகாணத்துக்கு விதிக்கப்பட்ட சூழலில் மண்ணெண்ணெய் குப்பி விளக்கில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தாம் கல்விகற்று கல்லூரிக்குப் பெருமைதேடிக்கொடுத்த சாதனைகள் தொடர்பாகவும், கலாநிதி ஆறு.திருமுருகனின் அன்புகலந்த கண்டிப்பான கற்பித்தல் தமக்கு வழிகாட்டியாக ஆற்றுப்படுத்தி சான்றோர்களாக தமது அணியிலுள்ளவர்களை உயர்த்தின என்றும் யுத்தம் உக்கிரமடைந்த காலத்தில் கல்வியை தளர்விலாது பெற்றுக்கொண்ட அந்த பசுமையான நினைவுகளை ம.ரவிபாலா, லயன் சி.ஹரிகரன் ஆகியோர் தமது உரையில் தெரிவித்து தமக்குக் கல்விகற்பித்த ஆசான்களுக்கு நன்றிகளைத் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் அவர்களுக்குத் தமிழ் பாடம் கற்பித்த தமிழாசான் ஜெகதீஸ்வரி ஆசிரியர், சுவிற்சர்லாந்திலிருந்து வருகைதந்த திருமதி கஜனி அகிலேந்திரன் ஆகியோருடன் இங்கு வாழும் 1997 கலைப்பிரிவு பழைய மாணவர்களும் கலந்து நிகழ்வைச் சிறப்பித்தனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## யதார்த்தமும் செல்லவேண்டிய பாதையும்

அதிகாரப் பகிர்வு, அரசமைப்பின் 13ஆவது திருத்தம், மாகாண சபைத் தேர்தல் ஆகிய மூன்றையும் பிரித்துப் பார்க்க முடியாது என்பதை அரசுத்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்குதமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்திருந்தது என்று ஒரு விளக்க அறிக்கையை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் விடுத்திருக்கிறார். அண்மையில் அரசுத் தலைவர் கூட்டிய அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அரசுத் தலைவருக்கும் தமிழ்த் தேசியக் கூ–ட்டமைப்பின் பிரதிநிகளுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக அரசுத் தலைவர் பேச்சை இடைநடுவில் முறித்துக் கொண்டு வெளியேறினார் என்ற தகவல்களின் பின்னணியில் இந்த அறிக்கை வெளிவந்திருக்கிறது.

அந்தப் பேச்சு மேசையில் அதிகாரப் பகிர்வா மாகாண சபைத் தேர்தலா என்று இரண்டில் ஒன்றைத் தெரிவு செய்யுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் அரசுத் தலைவர் காட்டமாகத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக வெளியான செய்திகளில், குறிப்பாக வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் வெளிப்படுத்திய கருத்துக்களில் இந்த விடயம் தொடர்பில் சுமந்திரன் மீது குற்றச்சாட்டுக்களை வைத்திருந்தார். சுமந்திரன் மாகாண சபைத் தேர்தலை வலியுறுத்தியதனால்தான் அரசுத் தலைவர் பேச்சை முறித்துக்கொண்டார் என்ற சாரப்பட அந்தக் கருத்துக்கள் இருந்தன.

இந்தப் பின்னணியிலேயே சுமந்திரனின் அறிக்கை வெளிவந்துள்ளது. அந்த அறிக்கை அதிகாரப் பகிர்வு. 13ஆம் திருத்தம், மாகாண சபைத் தேர்தல் ஆகிய மூன்றுமே அவசியமானவை என்று வலியுறுத்துகின்றது. இதனையே தாம் அரசுத் தலைவருக்கும் எடுத்துக் கூறியிருப்பதாகவும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார். அதாவது கூட்டமைப்பு 13ஐ நிராகரிக்கவில்லை என்பதும் அதற்காக அதிகாரப் பகிர்வு விடயத்தையும் தேர்தலையும் மட்டும் வலியுறுத்தவில்லை என்பதையும் அந்த அறிக்கை தெளிவுபடுத்துகின்றது.

இலங்கையின் அரசமைப்பில் 13 ஏற்கனவே இருக்கின்றது. எனவே அதனை நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியம். அதேநேரம் மக்கள் அரசமைப்பை முழுமையாக அனுபவிக்கும் வகையில் தேர்தல் நடத்தப்படுவதும் அவசியம். அதேநேரம் அதிகாரப் பகிர்வுக்கான நகர்வுகளும் முன்னெடுக்கப்படவேண்டும் என்பதிலும் தமிழ் மக்களுக்கு மாற்றுக் கருத்துக்கள் இல்லை. ஆனால், இவற்றில் ஒன்றைக்கூட நிறைவேற்றுவதற்கு சிங்கள, பௌத்த பேரினவாத ஆட்சிகள் தயாரில்லை என்பதுதான் யதார்த்தம். இந்தியா அல்ல மேற்குலகம் அல்ல பன்னாட்டுச் சக்திகள் எதனது அழுத்தங்களுக்கும் பணிந்து இதுவிடயத்தில் முன்னேற்றகரமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு இலங்கை ஆட்சியாளர்கள் தவறி வருகின்றனர். அதனைக் கட்டுப்படுத்தவோ, சரியான திசைக்கு நகர்த்தவோ முடியாத கையறு நிலையில் தமிழ் அரசியல் நின்றுகொண்டிருக்கின்றது என்பதே உண்மை.

இந்த மூன்று விடயங்களும் நிறைவேற்றப்படவேண்டும் என்பதை அரசுத்தலைவரிடம் வலியுறுத்துவதாலோ அல்லது அதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்பதைத் தெளிவுபடுத்துவதாலோ இந்த நிலமையில் எந்த மாற்றமும் ஏற்படப்போவதில்லை. கடந்த 75 ஆண்டுகளாகத் தமிழர்கள் இதுபோன்ற கோரிக்கைகளைத் தொடர்ந்து சிங்கள ஆட்சியாளர்களிடம் முன்வைத்தே வருகின்றார்கள். ஆனாலும் ஆட்சியாளர்கள் அதற்குச் செவிமடுக்க மறுக்கிறார்கள். இந்த நிலையில் ஆட்சியாளர்களின் அணுகுமுறையில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் என்ன செய்வது என்பதைச் சிந்திப்பதும் அதற்கான திட்டங்களைச் செய்படுத்துவதுமே இன்றைய காலத் தேவை. தமிழ் அரசியல் கட்சிகள் முன்னகரவேண்டிய பாதையும் அதுவே.

# இலக்கியத்தில் இணைந்த பனை

**அங்கம் – 7**



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

பனை செழித்தால் பாரம்பரியம் செழிக்கும்
பனை அழிந்தால் பாரம்பரியமே அழியும்
வருடம் முழுதும் வற்றாத வளம்
வாங்கி வந்த வரமே பனை

வானோங்கி நிற்பதுதான் எங்கள் கற்பகதருவாம் பனை மரம். வாழ்வில் தோள் கொடுத்துத் தோழமையுடன் நிற்பதுதான் எங்கள் பனை மரம். இருந்தாலும் பயன் கொடுக்கும். இருப்பை விட்டு மறைந்தாலும் பயன் கொடுக்கும். பனை என்பது மரம் அல்ல. அது நல் வரம் என்பதை மனமிருத்தல் வேண்டும். பனையின் நிலையினை நாங்கள் ஒவ்வொருவருமே மனத்தில் இருத்திட வேண்டியது அவசியமாகும். இருக்கும் வரை எவ்வளவு கொடுக்க முடியுமோ அவ்வளவு கொடுக்கிறது என்பதே எங்களுக்கெல்லாம் நல்ல தொரு பாடமாய் இருக்கிற தல்லவா ! மற்ற மரங்களைப் போல பனையினை நாங்கள் பார்த்துவிடக் கூடாது. தலை நிமிர்ந்து, தளர்வி ன்றி. கொடை வழங்கும் கர்ணனாய் கற்பகதருவாம் பனை காட்சி தருகிறது என் பதும் கருத்தி ருத்த வேண்டியதேயாகும்.

பற்று வரவு பதியுங் கணக்கோலை
மற்று முறுதி வரையோலை –கற்றவர்கள்
எந்திரங்கள் கீறி எழுத்தடைத்துக் கட்டுகின்ற
மந்திர வோலைகட்கு வாய்ப்பாகும்
என்று தாலவிலாசம் நாடகநூலும்
படிக்க நல்ல தம்பியர்க்கு
பட்டோலை நானாவேன்
எழுத நல்ல தம்பியர்க்கு
எழுத்தோலை நானாவேன்
தூரத்து வன்னைமைக்கு
தூதோலை நானாவேன்
வாசலில் வன்னிமைக்கு
வழக்கோலை நானாவேன்

என்று நாட்டுப் புறப்பாடலும் பனை ஓலையின் பயன்பாட்டினை வியந்து நிற்பதைக் காண்கிறோம். பனை ஓலையென்று நாங்கள் சாதாரண மாய் எண்ணிவிடும் அந்த ஓலைக்குள் இத்தனையும் இருக்கிறதா என்று எண் ணு கையில் பனையென்பது நல்வரம் என்றுதானே சொல்ல வேண்டும்.

ஏடுதந்த பனையின் ஓலை பற்றிய எண்ணப் பதிவினை பனை மர சோபனம் என்னும் நூல் எப்படிப் பார்க்கிறது என்பதையும் பார்ப்போம்.





பனையின் ஓலைகளை சாதாரண மாகப் பார்த்தே பழகிவிட்டோம். ஆனா ல் அந்த ஓலைக்குள் எவ்வளவு பொக்கிங்கள் பொதிந்திருக்கின்றன என் பதை ஏட்டுச் சுவடிகள் வரலாற்றுக்குள் பார்த்தோம். அந்த வரலாற்றுக்குள் சற்று உள்ளே போய் இன்னும் என்ன இருக்கிறது என்பதையும் பார்ப்பது அவசியம் அல்லவா !

இலக்கியம் வளர்த்த பனை என்று கூறுவதில் எள்ளளவும் ஐயம் இல்லை என்றே எண்ணத் தோன்றுகிறது,

எமது முன்னோர்களின் சிந்தனைச் செல் வங்களை இன்று நாம் பயனாக்கி நிற்கிறோம் என்றால் அதற்குதக்க துணையாக அமைந்தது பனை தானே! பனைமரத்தின் ஓலைச்சுவடிகள் இல்லை என்றால் பழந்தமிழ்ச் செல்வங்கள் எங்களுக்குக் கிடைத்திருக்க வாய்ப்பே இல்லாமல் போயிருக்கும். பனை இல்லையேல் நமக்கு மொழியில்லை. வரலாறு இல்லை . ஏன் பாரம்பரியமே இல்லை என்பதை உணரும் பொழுது மெய்சிலிர்க் கிறதல்லவா! பயன்மரம் என்று வள்ளுவமே போற்றும் தகை மையினைப் பெற்ற ஒரே மரமாய் கற்பகதருவாம் பனையே விளங்குகிறது என்பது மனமிருத்த வேண்டிய கருத்தல்லவா.

ஆறங்க வேதநூ லாகமநூல் வேறுமுள மெய்க்கலைகள்
போதமிகுந்த புராணநூல் – ஓதுகின்ற
மந்திரநூல் சிற்பநூல் வாகடநூல் வாய்மைமிகு
செந்தமிழ்நூல் பற்பலவும் தீட்டலாம் – சுந்தரஞ்சேர்
மங்கல நாளோலை மங்கையர்க்குக் காதோலை
துங்கமிகு நண்பருக்குத் தூதோலை – தங்குபல
வருடத்திற் கோர்தினத்தில் சரஸ்வதியம்மன் பூசைசெய்து
மஞ்சள் படிந்துவர மங்கலங்கள் பாடிவர
அட்சதையும் மலரெடுத்து அர்ச்சிப்பார் உலகமெலாம்
என்னைத் திருத்தியவர் எழுத்தாணி கைப்பிடித்து
ஆசிரியரும் வேதியரும் ஹரிநமோ என்றெழுதி
ஹரிஹரி என்றெழுதி அர்ச்சிப்பார் என்னையவர்
அரிச்சுவடி என்னாலே வரிக்காய்ப் பாடம்என்னாலே
தர்க்கங்கள் என்னாலே சாஸ்திரங்கள் என்னாலே
இராமாயணம் என்னாலே பாரதமும் என்னாலே
பாகவதம் என்னாலே பலசாத்திரங்கள் என்னாலே
திருவாய்மொழி என்னாலே திருமுறைகள் என்னாலே
நாலுவேதம் என்னாலே ஆறங்கம் என்னாலே
மங்கையர்க்கும் மன்னவர்க்கும் மணவறிவ தென்னாலே
வர்த்தகருஞ் செட்டிகளும் கணக்கறிவ தென்னாலே
பட்சமுள்ள வாசலுக்குப் பட்டோலை நானாவேன்
காதத்துப் பெண்களுக்குக் காதோலை நானாவேன்
தூரத்துப் பெண்களுக்குத் தூதோலை நானாவேன்
கலியாண வாசலுக்குக் கட்டோலை நானாவேன்
சீமந்து வாசலுக்குச் சீருடனே நான்போவேன்
பிள்ளை பிறந்ததென்றால் பெருமையுடன் நான்போவேன்
மைந்தன் பிறந்ததென்றால் மகிழ்ச்சியுடன் நான்போவேன்
அரண்மனையில் நானிருப்பேன் ஆஸ்தானத்தில் நானிருப்பேன்
மச்சுக்குள் நானிருப்பேன் மாளிகையில் நானிருப்பேன்
எமலோகம் போனாலெளம் எல்லோர்க்கும் தெரியவைப்பேன்
சிவலோகம் போனவர்க்குச் சீட்டோலை யாயிருப்பேன்

என்று பனை ஓலையின் ஒவ்வொரு நிலையினையும் இப்பாடல் காட்டுவதைக் கருத்திருத்துவது முக்கியம் அல்லவா !

பனையின் ஓலை பலவிதங்களில் எங்கள் வாழ்வியலில் எப்படியெல்லாம் இணைந்திருந்தது என்பதை இங்கு பல பாடல்களால் கண்டோம். பனையின் ஓலையினால் ஆகிய ஏடுகள் பற்றிய பல விடயங்களையும் பார்க்கப் பார்க்க பெருமையாகவும் வியப்பாகவுமே இருக் கும். எழுதும் நிலை ஏற்பட்டவுடன் எழுதுவதற்கு உரியதாய் பனையின் ஓலைதான் பொருத்தமாய் அமைந்தி ருக்கிறது. இலகுவாய் கிடைத்தது. அது வும் வாழும் அயலிலேயே கிடைத்தது. பனையின் ஓலையில் எழுதுவதைக் கண்டறிந்த தன்மையினைச் சாதாரண மாகப் பார்த்துவிட முடியாது. மிகச்சிறந்த தெரிவு என்றுதான் எண்ண வேண்டும். கல்லில் , மரத்தில், களிமண் தகட்டில், தோலில், செப்புத்தகட்டில் எழுதுவது என்பது இலகுவான செயலன்று. அதுமட்டுமல்ல அவற்றில் விரைவாக வும் எழுதிட முடியாது. எனவேதான் பனையின் ஓலையினை எழுதுவ தற்குத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். பனை ஓலையில் எழுதினால் அவற்றை போகும் இடமெல்லாம் எடுத்துச் செல்வது இலகுவாக இருக்கும் என்னும் காரணத்தாலும் - பனை ஓலை ஏடாய் மலர்ந்தது என்றும் எடு த்துக் கொள்ளலாம் அல்லவா !

ஓலையில் எழுதுவது என்பது இலகுவான காரியம் அல்ல. ஓலையில் எழுதுவது என்பது ஒருவித கலை எனலாம். எழுத்தாணியைக் கொண் டு மிருதுவான ஓலையில் எழுதும் பொழுது மிகவும் கவன மாகவே எழுத வேண்டும். ஓலையில் எழுதும் எழுத்துக்கள் - நாங்கள் தற் பொழுது காகிதத்திலோ அல்லது கணிப்பொறியிலோ அல்லது தட்டச் சிலோ எழுதுவதுபோல் இலகுவாக எழுதிவிடல் முடியாது. பிழை யினை திருத்தவோ அழிக்கவோ முடியாது. எழுதினால் எழுதியதுதான். எழுதும் ஓலையில் பிழை வந்தால் அந்த ஓலையினைத் தவிர்த்து விட்டு புது ஓலையில்த்தான் எழுதல் வேண்டும். மெய் எழுத்துக்களை எழுத முடியாது. குற்றுப் போட்டால் ஓலை கிழிந்து விடும். ஓலையில் எழுதும் எழுத்துக்களை எழுதுவது என்பதற்கு நல்ல பழக்கம் வேண் டியதாய் இருந்தது. தற்காலத்தில் விரித்து எழுதுவதுபோல் எழுதி விடவும் இயலாது, சுருக்கமாய் அதே வேளை செறிவாய் எழுதும் நிலையே காணப்பட்டது எனலாம். இதனாலேயே எழுதப்பட்ட எல்லாமே பாட்டின் வடிவத்தைக் கொண்டு அமையும் கட்டாயம் இருந்தது என் பது கருத்திரு த்த வேண்டியதே. ஓலையில் பாட்டெழுதும் முறையிலும் வரையறைகள் காணப்பட்டன என்பதற்கு ஆதாரங்களும் இருந்திருக்கின்றன.

அந்தணர்க்கு நாலா றரசர்க் கிருபதாம்
இந்த விரல் வணிகர்க் கெண்ணிரண்டாம்– முந்துவிரல்
வேளாரக் கீராறாய் வெள்ளோலை வேயவனை
தோளாய் அறிந் தொகுத்து

என்று கல்லாடனார் வெண்பா காட்டுகிறது. இதன் படி நான்மறை யா ளர்கள் இருபத்து நான்கு விரற்கடை அளவும், அரசர்கள் இருபது விரற் கடை அளவும், வணிகர்கள் பதினெட்டு விரற்கடை அளவும், வேளார் கள் பனிரெண்டு விரற் கடை அளவு எடுத்தே ஓலையில் எழுத வேண் டும் என்னும் நிலை காணப்பட்டது என்பதை இப்பாடல் தெரிவிக்கிறது. இதனை மேலும் உறுதிப் படுத்தும் வகையில் பொய்கையார் பாடலும் வந்து அமைகிறது.

ஓலைய திலக்கணம் உரைக்குங் காலை
நாலாறு விரலாம் நான்மறை யோர்க்கே
பாருடை யோர்க்கும் பதிற்றிரண் டாகும்
வணிகர்க் கீரெண் விரலாகும்மே
காணென மொழிய சூத்திரக் களவே

புத்தகம் சரியா பொத்தகம் சரியா என்று குழம்புகின்றோம். பொத்தகம் என்னும் சொல் பல ஏடுகளை இணைத்த இணைப்பினைக் குறித்தது என்பதற்கும்

(6ஆம் பக்கம் பார்க்க...)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee
Chikne Fried Rice with Vegetable
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swhpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

## 57 நாடுகளை சேர்ந்த 1,767 பேருக்கு பார்வை வழங்கிய இலங்கையர்கள்

இந்த வருடத்தின் கடந்த 28 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் 57 நாடுகளைச் சேர்ந்த 1,767 பேருக்கு பார்வை வழங்குவதற்கு இலங்கையர்கள் பங்களித்துள்ளனர் என இலங்கை கண் மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.

ஜப்பான், எகிப்து, பாகிஸ்தான், தாய்லாந்து, மலேஷியா, சிரியா உள்ளிட்ட 57 நாடுகளின் 117 நகரங்களில் பார்வையற்றோருக்கான கண்களை இலங்கையர்கள் தானம் செய்துள்ளனர் என இலங்கை கண் மருத்துவ சங்கத்தின் சிரேஷ்ட முகாமையாளர் ஜகத் சமன் மாதயாராச்சி தெரிவித்தார். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழும் ஒரு கண் அல்லது இரண்டு கண்களாலும் பார்க்க முடியாத எந்தவொரு நபருக்கும் இலங்கை கண் மருத்துவ சங்கம் இலவசமாக கண்களை வழங்க முன்வருவதாகவும் ஜகத் சமன் மாதயாராச்சி தெரிவித்தார். (05)

# மோட்டார் சைக்கிள் சாகசங்கள் செய்யும் இனந்தெரியாத நபர்கள்

## கிழக்கில் மக்கள் அச்சத்தில்

தலைக்கவசம் இன்றி மோட்டார் சைக்கிளில் வரும் இனந்தெரியாத நபர்கள் பொதுப்போக்குவரத்தை சீர்குலைத்து அச்சுறுத்தி வருகின்றனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவு சாய்ந்தமருது பெரியநீலாவணை பொலிஸ் பிரிவில் உள்ளடங்குகின்ற பிரதான வீதிகள் உள்ளக வீதிகளில் இவ்வாறு இனந்தெரியாத நபர்கள் தலைக்கவசம் இன்றி பொதுப் போக்குவரத்தை குழப்பும் வகையில் அதி சக்தி இயந்திரம் கொண்ட மோட்டார் சைக்கிளில் வருகை தந்து அச்சுறுத்தி வருகின்றனர்.

இவ்வாறு குறித்த மோட்டார் சைக்கிளில் இருவர் தனியாக வருவதுடன் அதிகசத்தம் கொண்ட ஒலி எழுப்பி வீதிகளின் நடுவே அதிவேகமாக பயணம் செய்து ஏனையோரை அச்சுறுத்தி வருகின்றனர்.

இந்தவிடயம் தொடர்பில் பொலிஸ் உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு அப்பகுதி நாடாளுன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் உட்பட சிலர் முறைப்பாடுகளை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், இவ்வாறானவர்கள் வீதி போக்குவரத்து சட்டத்தை மதிக்காமல் தொடர்ச்சியாக பாடசாலை நாள்கள் அலுவலக நாள்களிலும் மிக வேகமாக மோட்டார் சைக்கிள்களை செலுத்தி சாகசங்களை மேற்கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான சட்டவிரோதமாக பொதுப்போக்குவரத்தை சீர்குலைத்து உயிர்சேதத்தை ஏற்படுத்தும் செயலில் ஈடுபடும் நபர்களை கைது செய்ய பொலிஸார் உடனடியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (05)

# இலக்கியத்தில் இணைந்த பனை

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பழையபாடல்கள் சான்றாய் வந்து அமைகிறது. வெற்றிலைகளை அடிக்கி வைத்திருக்கும் அடுக்கினைக் குறிக்க கவளி என்னும் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தச் சொல்லை பலரும் மறந்து விட்டாலும் இன்னும் இந்தச் சொல் பழக்கத்தில் இருக்கிறது. வெற்றிலை அடுக்கினைக் குறிக்க வழங்கப்பட்ட இச்சொல் ஏடுகளின் அடுக்கினுக்கும் வழங்கப் பட்டிருக்கிறது.

பொத்தகம் படிகமாலை குண்டிகை பொருள் சேர் ஞான
வித்தகம் தரித்த செங்கை விமலையை அமலை தன்னை
மொய்த்த கொந்து அளக பாரா முகில் முலைத் தவள மேனி
மைத்தகு கருங்கண் செவ்வாய் அணங்கினை வணங்கல் செய்வோம்

கம்பராமாயணத்தில் சரஸ்வதியை வணங்கும் வகையில் அமைந்த இப் பாடலில் - சரஸ்வதி பொத்தகம் கையில் வைத்திருப்பதாய் காட்டுவது நோக்கத்தக்கது.

மெய்யெலாம் நீறு பூசி வேணிகள் முடித்துக் கட்டி
கையினில் படை கரந்த புத்தகக் கவளி ஏந்தி
மை பொதி விளக்கே என்ன மனத்தினுள் கறுப்பு வைத்து
பொய் தவ வேடம் கொண்டு புகுந்தனன் முத்த நாதன்

முத்திநாதன் என்பவன் உடம்பெலாம் திருநீறு பூசிக்கொண்டு சடை முடிந்த கோலத்தில் கையில் பொத்தகச் சுவடி வைத்துக் கொண்டு வந்தான் என்று பெரிய புராணத்தில் வரும் இப்பாடல் குறிப்பிடுகிறது. இங்கே பொத்தகச் சுவடி





என்பதுதான் முக்கியம். அக்காலத்தில் ஏட்டுச் சுவடிகளை அடுக்காய் கொண்டுவரும் நிலையும் இருந்திருக்கிறது என்பதும் அதற்காக வழங்கப்பட்ட பெயர்களையும் கருத்திருத்துவது நலமல்லவா !

ஏடுதந்த பனையின் ஓலைகளை எடுத்த எடுப்பில் ஓலை என்று அழைத்திடவும் முடியாது. ஓலை என்பது பொதுவான பெயராக இருந்தாலும் அது பனையின் மேல் முளைத்து எழுந்து வரும் பொழுது அதனை குருத்தோலை என்கிறோம். பசுமையாய் வந்தபின்பு சாரோலை என்கிறோம். காய்ந்த பின்னர் காவோலை என்கிறோம். குருத்தோலை என் னும் பெயர் கிறித்தவர்களுக்கு நன்கு பரிச்சயமான பெயராகும். குருத் தோலை பற்றி விவிலியத்திலும் வருகிறது. குருத்தோலை ஞாயிறு என்று ஒரு திருநாள் வருவதும் நோக்கத்தக்கது.

குருத்தோலை என்று கூறியவுடன் அதனுள் நல்லதொரு தத்துவம் பொதிந்து இருக்கிறது என்பதை நம்மில் எத்தனைபேர் அறிந்திருப்போம் குருத்தோலைக்கு ஒரு மென்மைத் தன்மையும் நெகிழும் தனமையும் உண்டு. மற்ற ஓலைகளைப் போல் குருத்தோலையானது கைகளை விரித்தபடி இருப்பதில்லை. பணிவுகொண்டு இருப்பவர்கள்போல - அக்குருத்தோலைகள் கூப்பியபடியே இருக்கின்றன. அதுமட்டுமல்ல அதன் நுனிகள் வானத்தை நோக்கியபடியே நிமிர்ந்தே நிற்கின்றன. இப்படிக் குருத்தோலைகள் இருப்பது - வாழ்வில் நம்பிக்கையினையும், பணிவையும் எமக்குப் புகட்டுவதாக இருக்கிறது என்பதும் மனங் கொள்ளத்தக்கதாகும்

( வளரும் )




OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
conditions apply*
இந்தியாவில் வேகமாக வளர்ந்து வரும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

# பொது வைத்தியசாலைகளுக்கு செல்வதற்கு மக்கள் அச்சமாம்

## ஜீ.எல்.பீரிஸ் கூறுகிறார்

மக்கள் பொது வைத்திய சாலைகளுக்குச் செல்லவே அச்சப்படுகிறார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

‘2024, ஒகஸ்ட் மாதமளவில் ஜனாதிபதித் தேர்தலுக்கான நடவடிக்கைகளை ஆரம்பிக்கவேண்டும்.

ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இன்னும் 12 வருடங்களுக்கு நாட்டை ஒப்படைக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி கூறியுள்ளது.

2048 இல் நாடு பாரிய முன்னேற்றமடையும் என்று இவர்கள் ஒரு கற்பனைக் கதையைக் கூறுகிறார்கள்.

தற்போதுள்ள மக்களுக்கு அடுத்த 25 வருடங்களில் நாடு எப்படி இருக்கும் என்பது தேவையில்லை.

உயிருடன் வாழ்வோமா என்பதுதான் இவர்களின் எதிர்ப்பார்ப்பாகும். லேடி ரிஜ்வே வைத்தியசாலையில் 3 அரை வயது குழந்தையொன்று, கிட்னி பாதிப்பால் சிசிச்சைப் பெற்றுவந்து, மருந்து இல்லாத காரணத்தால் மூன்று நாள்களுக்கு முன்னர் உயிரிழந்தது.

பேராதனை வைத்தியசாலை, ராகம வைத்தியசாலை போன்ற பல வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாடு மற்றும் மருந்து ஒவ்வாமையால் பலர் உயிரிழந்தார்கள்.



35 வீதமான குடும்பங்கள், இரண்டுவேளை உணவை மட்டும்தான் உட்கொள்கிறார்கள் என்று ஆய்வொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிலர் ஒருவேளை மட்டும்தான் உண்கிறார்கள். உணவை கட்டுப்படுத்தலாம். ஆனால், நோயாளிகளுக்கு மருந்துகளை கட்டுப்படுத்தி வழங்க முடியுமா? கடந்த 6 மாதங்களில் மட்டும் 64, தரமற்ற மருந்துகளை அரசாங்கம் வைத்தியசாலைகளுக்கு அனுப்பி, மீண்டும் அவற்றை திருப்பியெடுத்துள்ளது.

இதனால், மக்கள் நேற்று பொது வைத்தியசாலைகளுக்குச் செல்லவே அச்சப்படுகிறார்கள். வைத்தியசா லைக்கு சென்றாலே உயிரிழந்துவிடுவோமோ எனும் அச்சம் மக்களிடத்தில் ஏற்பட்டுள்ள நிலையில், அடுத்த 25 வருடங்களில் நாடு எப்படி இருக்கும் என்று அரசாங்கம் கதைகளைக் கூறிவருகின்றமை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# இலங்கையின் அரசமைப்பையே தீயிட்டு எரிக்கும் நிலை ஏற்படும்

## சிவாஜிலிங்கம் எச்சரிக்கை

இலங்கை அரசமைப்பையே தீயிட்டு எரிக்கும் நிலை ஏற்படலாம் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



13 ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவது தொடர்பாக இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் மக்கள் விரும்பும் தீர்வை நாங்கள் வழங்க முடியாது என்று அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். இலங்கை அரசமைப்பில் உள்ள 13 ஆவது திருத்தத்தை வழங்குவதற்கு நாடாளுமன்றத்தில் உள்ள எவரது அங்கீகாரமும் தேவையில்லை. ஆனால், எமது ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க 13 ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவது தொடர்பில் நாடாளுமன்றத்தைக் கேட்கவேண்டுமே ஒரு பித்தலாட்டத்தை நடத்தி வருகின்றார்.

தமிழ் மக்களிடம் நாம் கூற விரும்புகின்றமை என்னவென்றால் எமது சுதந்திரத்துக்கான பொதுசனவாக்கெடுப்பைக் கோரும் செயற்பாடானது ஒரு சில கட்சிகள் மாத்திரமே முன்னெடுத்து வருகின்றன. ஆனால் அனைவரும் இது தொடர்பில் பேசுமிடத்து இந்த விடயத்தில் சர்வதேசம் தலையிட்டு ஒரு பொதுசனவாக்கெடுப்பை நடத்தி தமிழ் மக்கள் கேட்கும் சுதந்திரத்தைப் பெறமுடியும். 13 ஆவது திருத்தத்தை சிங்கள இனவாதிகள் எரித்தார்கள். இதே போன்ற தொரு நிலை மீண்டும் ஏற்பட்டால் இலங்கையின் அரசமைப்பையே தீயிட்டு எரித்துவிட்டு சர்வதேச சமூகத்தை நோக்கி செல்லுகின்ற நிலை ஏற்படும். ஆகவே, இலங்கை அரசு தொடர்ந்து ஏமாற்றுகின்றது என்றால் அதற்கு ஏமாறுபவர்களும் பொறுப்பாளிகள் ஆகின்றனர். என்று தெரிவித்துள்ளார். (05)

# துறைநீலாவணையில் கறுப்பு ஜூலை நிகழ்வு



மீண்டும் ஒரு கறுப்பு ஜூலைக்கு அரசாங்கம் வித்திடுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

துறைநீலாவணை தமிழரசுக்கட்சியின் வட்டாரக்கிளையின் ஏற்பாட்டில் கறுப்பு ஜீலை தின நிகழ்வு நேற்று (திங்கட்கிழமை) துறைநீலாவணையில் வட்டாரக்கிளையின் தலைவர் த.கணேசமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொலிஸ் அதிகாரம் இல்லாத அதிகார பரவலாக்கலில் நாம் எவ்வாறு எமது மக்களுக்கு எதிராக நடக்கும் அநீதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து பாதுகாக்க முடியும் என்று கேள்வியும் எழுப்பியுள்ளார்.

தற்போதைய தலைவர்கள் மக்களை காப்பாற்ற முடியாத நிலையிலேயே செயற்பட்டுக் கொண்டிருப்பதாகவும் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஈஸ்டர் குண்டு வெடிப்பு சம்பவமானது அரசியல் இலாபம் ஈட்டும் வகையில் திட்டுமிட்டு செய்யப்பட்ட விடயமாக தற்போது வரையில் பேசப்பட்டு வருவதாகவும் அவர் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

இந்தநிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேந்திரன் ஞா.சிறிநேசன் மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன் காரைதீவுப் பிரதேசசபை தவிசாளர் கி.ஜெயசிறில் தமிழசுக்கட்சியின் இளைஞர் அணித்தலைவர் உட்பட தமிழரசுக்கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது, (05)




# மஹிந்த ராஜபக்ஷ என்பவர் விற்க முடியாத குப்பைமேடு

## எஸ்.எம்.மரிக்கார் சாட்டை

மஹிந்த ராஜபக்ஷ என்பவர் விற்க முடியாத குப்பைக் கூடமாகிவிட்டார். இனியும் இவரை வைத்து அரசியல் செய்ய முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி அலுவலகத்தில் இடம் பெற்ற ஊடகசந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாடாளுமன்றத்தைக் கலைத்து உடனடியாக நாடாளுமன்றத் தேர்தலுக்கு செல்லுமாறு நான் ஆளும் தரப்பு உறுப்பினர்களுக்கு சவால் விடுக்கின்றேன்.

நாம் தேர்தல்களுக்கு அஞ்சப்போவதில்லை. நாளை தேர்தல் நடந்தால்கூட நாம் முகம் கொடுக்கத் தயாராகவே உள்ளோம்.

மக்கள் இன்று போராட்டங்களில் ஈடுபடுவதில்லை தான். ஏனெனில், வீதிகளில் இறங்கி போராடுவதற்கு பதிலாக தங்களின் வருமானத்தை உயர்த்தும் வழிகளை பார்க்கலாம் என்றுதான் மக்கள் நினைக்கிறார்கள்.



ஆனால், மக்களிடம் உள்ள கோபம் அப்படியே தான் உள்ளது என்பதை அரசாங்கம் மறந்துவிடக்கூடாது. தற்போது சிலர், ஜனாதிபதித் தேர்தல்தான் அடுத்ததாக வரும் என்று கூறுகிறார்கள்.

கூறும் அவர்களுக்கே தெரியும், பொதுத் தேர்தல் ஒன்று தான் அடுத்து நடைபெறும் என்று. மஹிந்த ராஜபக்ஷ என்பவர் விற்க முடியாத குப்பைக் கூடமாகிவிட்டார். இனியும் இவரை வைத்து அரசியல் செய்ய முடியாது. ஜனாதிபதியும் விரைவில் வீழ்ந்துவிடுவார். எனவே, தைரியம் இருந்தால் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முகம் கொடுக்க தயாராகுங்கள்.

ஏனெனில், இப்போது மக்கள் தொடர்பாக கவலைப்படும் ஆளும் தரப்பினர், சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லாதத் தீர்மானத்தின்போது அவருக்கு ஆதரவாகத்தான் வாக்களிப்பார்கள்.

மக்களை பாதுகாக்க யார் நடவடிக்கை எடுப்பார்கள் என்பது இறுதியில் தெரிய வரும்' என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

## பெற்றோல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீளப் பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகார பகிர்வை வலியுறுத்தி வடக்கு, கிழக்கு மக்களாகிய நாங்கள் தொடர்ந்தும் குரல் கொடுத்துக்கொண்டு இருப்போம் என வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் வடமாகாண இணைப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தெரிவித்தார்.

போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் பல்வேறு பதாகைகளை ஏந்தியவாறு அமைதி வழியில் ஏனையவர்களின் கவனத்தை ஈர்த்து நின்றனர். இந்தப் போராட்டம் தொடர்பாக ஜாட்சன் தெரிவித்ததாவது:

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி இணைந்த வடக்கு கிழக்கிற்கான சமஷ்டியை வலியுறுத்தித் தொடங்கப்பட்ட எமது செயற்பாடுகள் ஓகஸ்ட் முதல் நாளுடன் ஒரு வருடத்தை எட்டுகிறது.

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்திற்குள் மீளப்பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகார பகிர்வை வலியுறுத்தி 100 நாள் செயலமர்வை நடத்தி இருந்தோம்.

அதன் விளைவாக மக்கள், பல்வேறு குழுக்கள், சிவில் சமூகம் உள்ளிட்ட பலருடன் கலந்துரையாடி நாங்கள் ஓர் அறிக்கையை சமர்ப்பித்திருக்கின்றோம். பல்வேறு நாடுகளுக்கும் அறிக்கையை சமர்பிக்கின்றோம்.

மக்களுடைய தேவைப்பாட்டிற்குள் இந்த நாட்டில் சமஷ்டி முறையிலான மீள பெற முடியாத ஒரு தீர்வை அதுவும் சர்வதேச நாடுகள், அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, இந்தியா போன்ற நாடுகளில் இருக்கக்கூடிய விடயங்களைக் கலந்து ஆலோசித்து அதற்குள் உகந்ததை இலங்கைக்குள் இங்குவாழ்கின்ற தமிழ், முஸ்லீம் மற்றும் மலையாக மக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் வடக்குக் கிழக்கில் மீளப் பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வழங்க வலியுறுத்தி அதிகார பகிர்வுக்கான மக்கள் குரல் செயலமர்வின் ஒரு வருட நிறைவை நாங்கள் பூர்த்தி செய்கிறோம்.

மக்களின் குரலாக தொடர்ந்து ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்குகிழக்கு மாகாணத்திற்குள் மீளப் பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகார பகிர்வை வலியுறுத்தி வடக்கு கிழக்கு மக்களாகிய நாங்கள் தொடர்ந்தும் குரல் கொடுத்துக்கொண்டு இருப்போம்.

இந்த விடயத்தில் அரசும் சர்வதேசமும் தொடர்ந்து கண்ணோக்க வேண்டும் என்பதே மக்களின் கோரிக்கையாக உள்ளது. - என்றார்.

# அரசை விமர்சிப்பவர்கள் அதற்கான தீர்வுத் திட்டத்தையும் முன்வைக்குக

## அகிலவிராஜ் தெரிவிப்பு



விமர்சனங்களை முன்வைப்பவர்கள் அதற்கான தீர்வுத் திட்டங்களையும் வழங்க வேண்டுமென முன்னாள் அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவருமான அகிலவிராஜ் காரியவசம் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

ரணில் விக்கிரமசிங்க இந்த அரசாங்கத்தை பொறுப்பேற்றபோது, யாரும் இந்நாட்டை பொறுப்பேற்க முன்வரவில்லை.

ஏனெனில், அவர்களுக்கெல்லாம் சவால்களுக்கு முகம் கொடுக்க தைரியம் கிடையாது. ஜனாதிபதிக்கு மிகவும் சவாலான செயற்பாடுகள்தான் அன்று காணப்பட்டன.

எடுக்க வேண்டிய அனைத்து முடிவுகளையும் கஷ்டங்களுக்குமத்தியில்தான் அவருக்கு எடுக்க வேண்டிய சூழல் காணப்பட்டது.

ஆனால், நாட்டை முன்னேற்றுவதாயின் அவ்வாறான தீர்மானங்களை எடுத்தே ஆக வேண்டும். சர்வக்கட்சி மாநாட்டில் கலந்து விட்டு, பலரும் பல கருத்துக்களை வெளியிடுகிறார்கள்.

ஆனால், ஒருவரிடம்கூட, பிரச்சினைகளுக்கான தீர்வுத்திட்டங்கள் கிடையாது. எமக்கு மக்கள் ஆணை இல்லையாம்.

அப்படியானால், மக்கள் ஆணை உள்ள தரப்புக்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை முன்வைக்கட்டுமே.

நாட்டைப் பொருளாதாரப் பிரச்சினைகளில் இருந்து மீட்டெடுக்கும் செயற்பாடுகளை ஜனாதிபதி சரியாக முன்னெடுத்துச் செல்கிறார்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான கூட்டணியொன்றை விரைவில் நாம் ஸ்தாபிப்போம்.

இந்தக் கூட்டணி தான், நாட்டின் அடுத்த ஆட்சியைக் கைப்பற்றும். - என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.08.2023இல் வெளியிடப்பெற்றது.